அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்வு, டிசம்பர்–2026

NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME EXAMINATION (NMMS) 2026– 2027

செய்திக் குறிப்பு

2026–2027–ம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் எட்டாம் வகுப்பு மாணவர்கள், 2026 **டிசம்பர் மாதம் 12–ஆம் தேதி (சனிக்கிழமை)** அன்று நடைபெறவுள்ள தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை திட்டத் தேர்விற்கு (**NMMS**) விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. உதவித் தொகை வழங்க மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு **NMMS** தேர்வு அனைத்து வட்டார அளவில் (Block Level) தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு **12.12.2026 (சனிக்கிழமை)** அன்று நடைபெறவுள்ளது.

இத்தேர்விற்கு மாணவர்கள் தங்கள் பள்ளிகள் மூலம் தேர்வுக் கட்டணத் தொகை ரூ.50/– செலுத்தி 26.10.2026 (பிற்பகல்) முதல் **03.11.2026** வரை விண்ணப்பித்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

ஓம்/–
இயக்குநர்

நாள். 23.10.2026
இடம். சென்னை–6.